தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2021

**8 வயதுப்பிரிவு**
(01.01.2013 – 31.12.2013 வரையில் பிறந்தோர்)

## அச்சம் தவிர்

அச்சம் இன்றி வாழ்வதே வீரம். தீமை கண்டு அஞ்சாத நெஞ்சுடன் எதிர்த்து நிற்பவரே வீரர். நாம் எப்போதும் உறுதி உள்ளவர்களாக வாழ வேண்டும். வீரமும் மானமும் தமிழரின் சொத்துகளாம். மான உணர்வு மேலோங்கும் போது அச்சம் எம்மை விட்டு அகலும். தீங்கு செய்பவர்களை எதிர்க்கும் துணிவு பிறக்கும்.

தமிழரை அடிமையாக்கி அழிக்க நினைத்தவரை எதிர்க்கத் துணிந்தார் தலைவர் மாமா. அவர் வழியில் பல்லாயிரம் பேர் அணிதிரண்டனர். தமிழீழ தாயகத்தைக் காக்கத் தோள் கொடுத்தனர். வீரத்துடன் போர்க்களத்திலே போராடி வெற்றிகளைக் குவித்தனர். தமிழீழ விடுதலைக்காய்த் தம்முயிர் தந்து மாவீரர் ஆகினர்.

வந்த பகையை எதிர்த்திட்ட வீரரையும் பகையைத் தேடிச் சென்று அழித்திட்ட வீரரையும் வளர்த்து வரலாறு படைத்தார் தலைவர் மாமா. இவர்களுள் கரும்புலி வீரர் கதைகளைக் கேட்டேன். வியப்புற்றேன். இவர்கள் தியாகத்தின் உச்சம்!

காலம் குறித்து சாவை அணைத்த உன்னதம் இவர்களின் வீரம்! “அச்சம் தவிர்” என்ற பாரதியாரின் கூற்றுக்குச் செயல் வடிவம் கொடுத்தவர்கள் இவர்களே. அச்சம் தவிர்ப்போம், திடங்கொள்வோம், மாவீரம் படைப்போம், வெல்வது உறுதி.

நன்றி,
வணக்கம்.